OS 400/2021

பி.வா.சா.1 மதன்குமார் த/பெ அண்ணாமலை

நாள் 07.08.2025

**குறுக்கு விசாரணை**

1. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 யார் யாருக்கு எழுதி கொடுத்தது என்றால் எனது அப்பா வாதிக்கு எழுதி கொடுத்தது ஆகும். இந்த வழக்கு அடமானக்கடனுக்காக போடப்பட்ட வழக்கு என்றால் சரிதான். திருவண்ணாமலை முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் சொத்துக்காக கிரைய ஒப்பந்தத்தின் பேரில் வழக்கு போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கில் நான் தான் பதிலுரை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரிதான். 1 மற்றும் 3ம் பிரதிவாதிகள் என்னுடைய எதிர்வழக்குரையை ஏற்றுக்கொண்டார்கள் என்றால் சரிதான். வழக்கை நான் மறுத்திருந்தாலும் அதற்கு ஆதரவாக ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் அப்பா தற்கொலை செய்து கொண்டு இறந்துவிட்டார் என்றால் சரிதான். என் அப்பா இறந்தது சம்மந்தமாக இறுதி அறிக்கையினை போலீசார் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

2. என் அப்பா இறந்தது 2021 ஆகும். எனது அப்பாவின் இறப்பிற்கு வாதி காரணம் என்று இதுநாள் வரை போலீசார் இறுதி அறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வளத்தி காவல் நிலையம் பிழையுடைய சங்கதி என்று வழக்கை மேலே விசாரிக்கவில்லை என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் அதுபோன்று முடிக்கவில்லை. வா.சா.1 குறுக்கு விசாரணை செய்த போது நான் நீதிமன்றத்தில் ஆஜராகி இருந்தேனா என்றால் இருந்தேன். எனது அப்பா இறந்ததற்கான முதல் தகவல் அறிக்கையை இந்த வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது அப்பா எழுதி வைத்த கடிதம் எங்கு இருக்கிறது என்றால் போலீசாரிடம் இருக்கிறது. திருவண்ணாமலை காவல் கண்காணிப்பாளர் அலுவலகம், விழுப்புரம் காவல் கண்காணிப்பாளர் அலுவலகம், தலைமை செயலகத்திலும் இருக்கிறது. அவை அனைத்தும் அசல் கடிதங்களா என்றால் ஆமாம். மேற்படி கடிதங்களை என் எதிர்வழக்குரையை நிரூபணம் செய்ய நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இருக்கிறேனா என்றால் போலீசார் தர மறுத்துவிட்டார்கள்.

3. நான் சொல்வது போல் கடிதங்கள் எதுவும் இல்லை என்பதால் தான் அவற்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. என் தகப்பனார் திடீர் என்று இறந்துவிட்டதால் அந்த அனுதாபத்தை பயன்படுத்தி வாதியிடம் வாங்கிய கடனை ஏமாற்றபார்க்கிறேன் என்றால் இல்லை. அடமானக்கடனுக்கு பதிலாக திருமண மண்டபத்தை வாதிக்கு நிர்வாகம் செய்து கொள்ள விட்டுவிட்டதாக கூறியிருப்பதற்கு ஆதாரமாக எழுத்து மூலமான ஆவணம் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. அடமானச்சொத்தை எனது அப்பா இவ்வழக்கின் 4 மற்றும் 5 பிரதிவாதிகளுக்கு கிரையம் செய்து கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். 4 மற்றும் 5 பிரதிவாதிகளுக்கு கிரையம் செய்து கொடுக்கும் சமயத்தில் தாவா அடமானம் நிலுவையில் இருந்தது என்றால் சரிதான். அடமானகடன் திருப்பி செலுத்தியதற்கான ஆதாரம் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. யூகத்தின் அடிப்படையில் எனது அப்பா அடமானக்கடனை திருப்பி செலுத்திவிட்டதாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

4. எனது அப்பா கடனை திருப்பி செலுத்தியதற்கு ஏதேனும் அத்தாட்சி எழுதி வாங்கியிருக்கிறாரா என்றால் இல்லை. தாவா அடமானக்கடனை பிரதிவாதிகள் அனைவரும் பைசல் செய்ய கடமைபட்டவர்கள் என்றால் இல்லை. யூகத்தின் அடிப்படையில் பொய்யான விவரங்களை வாதிக்கு எதிராக கூறி எதிர்உரை தாக்கல் செய்து நான் பொய்யாக சாட்சியம் அளிப்பதால் வழக்கின் கூடுதல் செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்பட வேண்டும் என்றால் சரியல்ல. பொய்யான சங்கதிகளின் அடிப்படையில் ஆதாரம் ஏதும் தாக்கல் செய்யாமல் பொய்யாக சாட்சியம் அளிப்பதால் என் சாட்சியம் ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல. தாவா செலவுத்தொகையுடன் தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.